1993 ஏப்ரல் 21]

தாமதமும் ஏற்படுவதில்லை. திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு 1989—90 வரை தள்ளுபடி மானியங்கள் வழங்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு 1990-91 ஆம் ஆண்டுக்கான தள்ளுபடி மானியம் 16-12-1992 நாளிட்ட அரசு ஆணையின்படி வழங்கப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கவேண்டிய மானியத் தொகை வழங்கப்பட்டு விட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத தெரிவித்துக்கொண்டு, ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்திலேயே அது வழங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அரசு தணிக்கைத் துறையின் மூலம் தணிக்கை செய்யப்பட்டு ,அதன் மூலம் தணிக்கை அறிக்கைகள் வாரியத்திற்குக் கிடைக்கப்பெற்று, அரசு ஆணைக்காக மீண்டும் உரிய முறையில் எடுத்துரைக்க அனுப்பப்படுகிறது. இது அரசு அலுவலக ரீதியாக ஏற்படும் நிலையே தவிர இதிலே காலதாமதம் ஏற்படுவது இல்லை. எனவே, இந்த ரிபேட்தொகையைப் பொறுத்தவரையில் அரசின் நடைமுறைகள் முடிக்கப்பட்டு உடனுக்குடன் இந்த ரிபேட் தொகைகள் வழங்கப்படுகிறது என்பதைத் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

403—

சிவகங்கையிலுள்ள இராமநாதபுரம் மாவட்ட நூலகம்

* 15681— டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:-

(அ) இராமநாதபுரம் மாவட்ட நூலகம் சிவகங்கையில் இருந்து மாற்றப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையில் உள்ள மாவட்ட மைய நூலகம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு உரியதாகும். இம்மாவட்ட மைய நூலகத்தை சிவகங்கையிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றி அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

408—

வெளி மாநிலங்களிலுள்ள தமிழக கைத்தறி விற்பனை நிலையங்கள்

*9029— திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள தமிழக கைத்தறி விற்பனை நிலையங்கள் தொடர்ந்து நஷ்டத்தில் செயல்படுவதால் அவற்றை மூடிவிடுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெளி மாநிலங்களில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு நிறுவனம் என அழைக்கப்படும் கோ-ஆப்டெக்ஸ் 175 இடங்களில் கிளை விற்பனை நிலையங்களை நிறுவி இயங்கி வருகிறது. அவற்றில் பெங்களூர், நாக்பூர், ஜாம்நகர், தாமரைச்சேரி, பாட்னா-2 ஆகிய ஐந்து இடங்களில் நடத்தி வந்த கிளை விற்பனை நிலையங்களில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால் 31-3-1992 உடன் மூடப்பட்டு விட்டன.

412—

கருக்கை காலனி ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள்

* 9885—திரு. ஆர். தங்கராசு:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கருக்கை காலனி ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?